## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

## அரச துறை செயற்றிறன் திட்டத்தின் (PSEP)
## பொது முதலீட்டிற்குப் பொறுப்பான பணிக் குழு (PIDTF)
## உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு

மூலோபாய திட்டங்களை ஒருங்கிணைத்து கண்டிப்பான மீளாய்வு மேற்கொள்வதற்கு ஒரு நிறுவன அடிப்படையினை வழங்குவதற்காக பொது முதலீட்டிற்குப் பொறுப்பான பணிக்குழுவொன்றினை (PIDTF) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு தாபித்துள்ளது. இவ் (PIDTF) ஆனது (PSEP) யினுடைய ஒரு அலகு ஆகும்.

பின்வரும் பதவிகளை முன்மொழியப்பட்டுள்ள பிரிவிற்கு நிரப்புவதற்காக தகைமையுள்ள அனுபவம் மிக்க இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காக இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**பிரதி திட்டப் பணிப்பாளர் (PS 2) - 01 பதவி**

**அடிப்படைக் கல்வித்தகைமைகள் (கீழே 1 அல்லது 2 அல்லது 3) அமைய**

1. தொடர்புடைய துறையின் இளமாணிப் பட்டமொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

தொடர்புடைய துறையின் இளமாணிப் பட்டத்திற்கு சமமான ஒரு கல்வித் தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை யொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றில் தொடர்புடைய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஒரு தொழிற் தகைமை தகைமையைக் கொண்டிருத்தல்.

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 11 வருட கால வகிபங்கு தொழிற் தகைமையையுடன் கூடிய அனுபவம் மற்றும் அதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 09 வருட கால வகிபங்கு தொழிற் தகைமையையுடன் கூடிய அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்க நாடளாவிய சேவை ஒன்றின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு இணையான பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

**அத்துடன்**

தரம் 1 பதவியில் ஆகக் குறைந்தது 08 வருட கால அனுபவம் கொண்டிடுத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 145,000- 160,000

**திட்ட நிபுணர் (காணி சுவீகரிப்பு, சிவில் பொறியியல், மற்றும் சட்டம்) (PS3) - 03 பதவிகள்**

**அடிப்படைக் கல்வித் தகைமைகள் (கீழே 1 அல்லது 2 அல்லது 3) அமைய**

1. தொடர்புடைய துறையின் இளமாணிப் பட்டமொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   தொடர்புடைய துறையின் இளமாணிப் பட்டத்திற்கு சமமான ஒரு கல்வித் தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை யொன்றைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

   அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றில் தொடர்புடைய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஒரு தொழிற் தகைமையைக் கொண்டிருத்தல்.

   **அத்துடன்**

   முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 10 வருட கால வகிபங்கு தொழிற்த் தகைமையையுடன் கூடிய அனுபவம் மற்றும் அதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **மற்றும்**

   தொடர்புடைய துறையில் ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 08 வருட கால வகிபங்கு தொழிற் தகைமையையுடன் கூடிய அனுபவம் பெற்றிருத்தல்.

3. அரசாங்க நாடளாவிய சேவை ஒன்றின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு இணையான பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

   **அத்துடன்**

   தரம் 1 பதவியில் ஆகக்குறைந்தது 07 வருட கால அனுபவம் கொண்டிடுத்தல் வேண்டும்.

**சம்பளம்**: ரூபா 140,000- 155,000

**பொதுவான நிபந்தனைகள்**

அ). **வயது எல்லை**

பிரதிதிட்டப் பணிப்பாளர் - 50 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

திட்ட நிபுணர - 65 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆ). விண்ணப்பதாரி கட்டாயமாக இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

**சம்பளமும் ஏனைய வசதிகளும்**

சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016.03.24 ஆம் திகதியிடப்பட்ட 01/2016 இலக்கச் சுற்று நிருபத்திற்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட முகாமைத்துவ சேவைச் சுற்று நிருபங்களின் அடிப்படைக்கு அமைவானதாகும்.

**சேவை விதி முறைகளும் மற்றும் நிபந்தனைகளும்**

அரச சேவையில், உள்ளூராட்சி அதிகார சபைகள் உள்ளடங்கலாக மாகாண சபை அரச சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில், நியதிச் சபைகளில், அரசாங்கத்திற்கு முழுமையான சொந்தமாகவுள்ள கம்பனிகளில், நிலையான / நிரந்தரப் பதவியிலிருந்து முழு நேர அடிப்படையிலும், சம்பளமற்ற விடுமுறையிலும் தற்காலிகமாக விடுவிப்புச் செய்யப்பட்டுள்ள சேவை உறுதிப்படுத்தப்பட்ட ஒரு உத்தியோகத்தர். மற்றும் அரசாங்க சேவையில் இல்லாத ஒரு நபரை வெளியிலிருந்து நியமனம் செய்வதாயின் ஒப்பந்த அடிப்படையிலும் ஆகும். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதாயின் ஆரம்பத்தில் ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டதாகவும் அதன் பின்னரான காலநீடிப்பு செயற்றிறன் வெற்றியடைவின் அடிப்படையில் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் முறை**

தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**விண்ணப்பங்கள்**

விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் முழு விபரங்களும் மற்றும் மின் அஞ்சல் முகவரி தொலைபேசி இலக்கங்கள் (இருப்பின்), சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்கள் உள்ளடங்கலாக தங்களது சுயவிபரங்கள் (CV), மற்றும் இரண்டு உறவினர் அல்லாத பிரமுகர்களின் விபரங்களையும் இணைத்து, விண்ணப்பங்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாகப் பதிவுத் தபாலில் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அல்லது மின் அஞ்சல் முகவரி (addi.sec.planning@gmail.com) 03.08.2018. அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றார்கள். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். அரச துறை / அரச கூட்டுத்தாபனத்தினைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை சம்பந்தப்பட்ட தமது நிறுவனத் தலைவர் ஊடாகச்

சமர்ப்பிக்கும் அதேவைளை அதன் ஒரு பிரதியினை முன்கூட்டியே, பின்வரும் முகவரிக்கு நேரடியாகத் தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கோரப்படுகின்றது

**செயலாளர்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**
**1 ஆம் மாடி“மிலோதா”கட்டிடம்**
**பிறிஸ்ரல் வீதி**
**கொழும்பு -01**

**மேலதிக விபரங்களிற்கு 0114461609**